கல்வி வணிகமயத்தை தடுத்திட... கல்வி காவியமாதலை தடுத்திட...
பொதுக் கல்வியை பலப்படுத்த...

# இந்திய மாணவர் சங்கத்தின்

தமிழ்நாடு – புதுச்சேரி

# 24வது மாநில மாநாடு

2015 செப்டம்பர் 4,5,6

SFI
தமிழ்நாடு-புதுச்சேரி
24வது மாநில மாநாடு
செப்-4,5,6-2015

அன்பு நெஞ்சத்தீர் வணக்கம்

எந்த ஒரு நாட்டின விடுதலை வரலாறும் அந்த தேசத்தின் இளம் ரத்தத்தால் எழுதப்பட்டதே! இந்திய தேசத்தின் விடுதலை வரலாற்றில் இளைய சக்திகளின் பங்கும், தியாகமும் மகத்தானது. அத்தகைய தியாக வரலாற்றோடும், முற்போக்கு பாரம்பரியத் தோடும் பனி படர்ந்த இமயம் முதல் அலைகள் கொஞ்சும் குமரி வரை மாணவர் சமூகத்தை ஓரணியில் திரட்டி தனது இலட்சியப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கும் இயக்கம் இந்திய மாணவர் சங்கம்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்க்குணம், எல்லோருக்கும் சமமான தரமான அறிவியல் பூர்வமான கல்வி, சமூகப் பாதுகாப்புடனான வேலை, கல்வி வியாபாரத்திற்கு எதிராக, ஆண்-பெண் சமத்துவம், கல்விகூட ஜனநாயகம், தீண்டாமை மற்றும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக, ஜனநயாக உரிமைகளை பாதுகாத்திட, உழைப்பபாளி மக்களின் பண்பாட்டைப் பாதுகாத்திடவும் இடைவிடாது போராடி வருகிறது. மேலும் தேசத்தின் எல்லா வளங்களும், புதிய தொழிற்நுட்பங்களும் எல்லா மக்களுக்கும் கிடைத்திட சமரசமற்ற போராட்டத்தை நடத்திவருவதோடு சுதந்திரம், ஜனநாயகம், சோசலிசம் என்ற இலட்சிய பதாகையை உயர்த்திப் பிடித்துள்ள, சமூகப் பொறுப்புமிக்க மாணவர் இயக்கத்தின் தமிழ்நாடு – புதுச்சேரி மாநில மாநாடு 2015 செப்டம்பர் 4, 5, 6 தமிழ்மொழி வளர்த்த புதுவை நகரில் எழுச்சியோடு நடைபெற உள்ளது.

68 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் எல்லோருக்கும் கல்வி என்பது இன்றும் கேள்விக்குறியாக இருப்பது வேதனைக்குரியது. வசதி படைத்த கூட்டத்திற்கொரு கல்வியும் சாமானிய மக்களுக்கு ஒரு கல்வியும் என்று ஏற்றத்தாழ்வு மிக்க படிநிலை திட்டமிட்டு ஆட்சியார்களால் உருவாக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் பெரும் கூட்டத்திற்கு தான் விரும்பும் கல்வி மறுக்கப்பட்டே வந்துள்ளது. இந்த கல்வி மறுப்புக்கு யார் காரணம்? சுதந்திர இந்தியாவை நீண்ட காலம் ஆட்சி செய்த காங்கிரஸ், ஆளுகின்ற பாஜக உள்ளிட்ட முதலாளித்துவ அரசுகள்தான்.

இப்போது கல்வி உரிமைச் சட்டம் ( RTE ) நடைமுறைக்கு வந்துவிட்டது. கடையனுக்கும் கல்வி அடிப்படை உரிமையாக்கப்படும் என்றார்கள். ஆனால் கல்வி உரிமைச் சட்டம் கானல் நீராக மாறியுள்ளது. சட்டம் நடைமுறைக்கு வந்து 5 ஆண்டுகள் கடந்த பின்பும் இச்சட்டம் அமுலாக்கப்படவில்லை. சட்டத்தை போட்ட அரசு அச்சட்டத்தை அமலாக்காமல் அதற்கு நிதி ஒதுக்காமல் கல்வி உரிமைச் சட்டத்தை செயலிழக்க செய்வதை அனுமதிக்க முடியாது. ஆகவே கல்வி உரிமைச் சட்டத்திலுள்ள நல்ல அம்சங்களை நடைமுறைப்படுத்த போராடும் அதே வேளையில் அச்சட்டத்தினுள் குறைபாடுகளை களைந்து அச்சட்டத்தை வலுப்படுத்தவும் இந்திய மாணவர் சங்கம் போராடி வருகிறது.

அருகாமைப் பள்ளிகளை கொண்ட பொதுப்பள்ளி முறையினை நடைமுறைப்படுத்தவும், அரசு பள்ளிகளை கல்லூரிகளை, பொதுப்பல்கலைக்கழகங்களை பாதுகாத்து பலப்படுத்தவும் இந்திய மாணவர் சங்கம் செயலாற்றி வருகிறது. கல்வி வணிகமயத்தை மேலும் தீவிரப்படுத்துவதோடு, கல்வியில் இந்துத்துவ மதவெறி கருத்துக்களை புகுத்தி ஒற்றை கலாச்சாரத்தை, பண்பாட்டை நிலைநிறுத்த திட்டமிட்டு, பாடத்திட்டங்களில் மாற்றங்களை மேற்கொண்டு வருகிறது. அனைத்து கல்வி துறை சார்ந்த முக்கிய பொறுப்புகளிலும் ஆர்.எஸ்.எஸ்-ன் ஊழியர்களை நிணுமித்து வரலாற்றை திரிப்பதற்கும் முயற்சித்து வருகிறது. கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை கடந்தாண்டை காட்டிலும் 16 சதம் வெட்டப்பட்டுள்ளது. சர்வசிஹ அபியான் திட்டத்திற்கு 30000 கோடி ரூபாய் வெட்டி சுருக்கி இந்திய மக்களுக்கு மோடி அரசு அநீதி இழைத்துள்ளது.

மேலும் கல்வி நிலைய ஜனநாயக உரிமைகள் மீதும் கருத்து சுதந்திரத்தின் மீதும் கொடூர தாக்குதலை நடத்தி வரும் மோடி அரசு. மக்கள் விரோத அரசாகவும் உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகள் நலனை பாதுகாக்கும் அரசாகவுமே செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலும் புதுச்சேரியிலும் மோடி அரசு கடைபிடிக்கும் பொருளாதார கொள்கைகளையே கடைபிடித்து வருகின்றனர். இதனால் அரசுப் பள்ளிகள் சீரழிந்து வருகின்றது. தனியார் பள்ளி கல்லூரிகளில் கட்டண கொள்ளை என கல்வி வணிகமய நடவடிக்கை தீவிரப்படுத் தப்பட்டுள்ளது. மேலும் தாய்மொழி வழி கல்வி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் நிர்வாக சீர்கேடுகளை தடுத்திட, பல்கலையில் அனைத்து துறைகளிலும் 25 சத இடஒதுக்கீடு புதுச்சேரி மாணவர்களுக்கு கிடைத்திட, மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தலை தடுப்பதற்கு கல்வி நிறுவனங்களில் பாலியல் புகார் குழுக்களை அமைப்பது, கல்வி உரிமைச் சட்டம் அமலாக்குவது, தனியார் மருத்துக் கல்லூரிகளில் செண்டாக ஒதுக்கீட்டில் 50 சதமான இடஒதுக்கீடு உள்ளிட்ட மாணவர் பிரச்சனைகள் அதிகரித்து இருக்கிறது.

**S F I**

**இதுபோன்ற அரசுகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் மற்றும் கல்வி பிரச்சனைகள் குறித்து, மாநில மாநாடு விவாதிக்க இருக்கின்றது. மாநாட்டையொட்டி, மாணவர் கலை இலக்கிய போட்டிகள், கலைவிழாக்கள், கல்வி கருத்தரங்கள் கண்காட்சிகள் என புதுவை மாநகரம் விழாக்கோலம் காண உள்ளது.**

மாநாட்டில் புகழ்பெற்ற கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், தேசத்தின் சிறந்த தலைவர்களும், திரைத்துறை கலைஞர்களும் பங்கேற்க உள்ளனர். இன்றைய கல்வியின் அவலத்தை மாற்றிட புதுவையில் கூடும்

**மாநாடு வெற்றிபெற... ஆதரவு தாரீர்... நிதி தாரீர்**



# இந்திய மாணவர் சங்கம்

மாநாட்டு வரவேற்புக்குழு